தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, OCTOBER 17, 2023
செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 17, 2023 | ஒளி: 09 கதிர் 107 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## சா/த பெறுபேறு வருகிறது

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையின் பெறுபேறுகள் நவம்பரில் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சை முடிவுகள் கணினிமயமாக்கப்படும் நடவடிக்கைகள் இந்நாட்களில் முன்னெடுக்கப்படுகின்றன. 2022ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சை, 3,568 மையங்களில் மே மாதம் நடைபெற்றது.

கணினி மயமாக்கும் பணி முடிந்தவுடன் தேர்வு முடிவுகள் வெளியிட எதிர்பார்த்துள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## சனல்4 குற்றச்சாட்டை விசாரிக்கும் விசேட குழுவில்
# சிறுபான்மையினர் புறக்கணிப்பு



**இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் பெரிய சதி இருக்கின்றது**

**அறிக்கை இரண்டு மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்**

ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் பிரித்தானிய சனல் 4 தொலைக்காட்சி விடுத்துள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமிப்பதற்கான யோசனை, பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் குழுவினால் முன்வைக்கப்பட்ட இந்த பிரேரணை பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17) நிறைவேற்றப்பட உள்ளது. அந்த விசேட குழுவில் 20 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளுடன் சில அரசியல்வாதிகள் மற்றும் மூத்த இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் தொடர்பு வைத்திருப்பதாகவும், இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் பெரிய சதி இருப்பதாகவும் திட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதால், விசாரணை நடத்துவது முக்கியம் என்று இந்தப் பிரேரணையில் எம்.பி.க்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## "இரண்டு தேர்தல்களை தள்ளிப்போட சூழ்ச்சி"

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு புதிய தேர்தல் முறை கொண்டுவரப்படும் என்று கூறி ஜனாதிபதி தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒத்திவைக்க முயற்சித்தால் அதற்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட தீர்மானித்துள்ளன.

தொடர்ச்சி P2



## யாழ். ஜனாதிபதி மாளிகை குத்தகைக்கு விடப்பட்டது

யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதி மாளிகையானது, தகவல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்காக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (SLIIT) சுமார் 50 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

இதன் முதலீட்டு மதிப்பு, அண்ணளவாக 5,000 பில்லியன் ரூபாய்கள். கனேடிய முதலீட்டாளருடன் இணைந்து இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் இதனை தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக அபிவிருத்தி செய்யவுள்ளது.

தொடர்ச்சி P2



## "போர் ஒருபோதும் தீர்வாகாது"

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்துக்கு இடையில் நிலவும் மோதல் நிலைமையையடுத்து, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பலஸ்தீன மக்களுக்கு தனது ஆதரவை வெளிக்காட்டுவதற்காக கொழும்பிலுள்ள பலஸ்தீன தூதரகத்துக்கு திங்கட்கிழமை (16) சென்றிருந்தார்.

தொடர்ச்சி P2

## தீபாவளிக்கு திகா கேட்கிறார்

எஸ்.சதீஸ்

நவம்பர் மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீபாவளி கொண்டாடப்படவுள்ளது. இந்நிலையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 20 ஆயிரம் ரூபாவை வழங்குமாறு, பெருந்தோட்ட கம்பனிகளிடம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்



தொடர்ச்சி P2



## இஸ்ரேல்- பலஸ்தீனத்தை வலியுறுத்தி கிறிஸ்தவ காங்கிரஸ் போராட்டம்

இஸ்ரேல்- பலஸ்தீன் இரு நாடுகளுக்கிடையில் சமாதானம் மலரவேண்டுமென வலியுறுத்திய அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ், மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் ஆர்ப்பாட்டமொன்றையும் திங்கட்கிழமை (16) முன்னெடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## ஒய்வூதியத்துக்கு சிக்கல்

இலங்கையில் ஒய்வூதியம் வழங்குவதில் 2028 அல்லது 2030ஆம் ஆண்டுக்குள் நிதி நெருக்கடியை சந்திக்க நேரிடும் என ஒய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ஒய்வூதியத் திணைக்கள அதிகாரிகளுடன் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இந்தத் தகவல் தெரியவந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## தயாசிறிக்கு புதிய பதவி வழங்குமாறு ஆலோசனை



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பாராளுமன்ற உறப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு சிரேஷ்ட உப தலைவர் பதவி வழங்கப்பட வேண்டுமென கட்சியின் சிரேஷ்டர்கள் குழுவொன்று யோசனை தெரிவித்துள்ளதாக அரசியல் தகவல் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



## காக்கைதீவு - சாவக்காடு விவகாரத்துக்கு சுமூக தீர்வு

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம், சாவக்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் காக்கைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றுக்கிடையில் ஏற்பட்டிருந்த தொழில்சார் முரண்டுபாடுகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டின் மூலம் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## "அரசியலில் பாலியல் இலஞ்சம் கோருபவர்களே அதிகம்"

அப்துல்சலாம் யாசீம்

அரசியலுக்கு கிராமப்புறங்களில் இருந்து வரும் பெண்கள் பாதிக்கப்படுகின்றார்கள் பெண்களை எவ்வாறு பார்க்கின்றார்கள் என்பது பற்றி நாங்கள் நன்று அறிந்து உள்ளோம் என தெரிவித்துள்ள சமூக ஆர்வலரான கணபதிபிள்ளை சூரியகுமாரி, அரசியலில் பாலியல் இலஞ்சம் கோருபவர்களே அதிகம் காணப்படுகின்றனர் என தெரிவித்துள்ளார்.

பெண்களின் அரசியலுக்கான தடைகளை கலைந்தறிவோம் என்ற தொல்பொருளில் தேசிய ஒற்றுமைக்கான அபிவிருத்தி மன்றத்தினால் வெகுஜன ஊடக ஒத்துழைப்பு செயல் திட்டம் மற்றும் ஊடக கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள மல்லிகா ஹோட்டலில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்விடத்தை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## "முரளிதரனுக்கு மாலை போடுவோம்"

எஸ்.கணேசன்

" மலையகத்தில் சேவைகளை முன்னெடுப்பதற்கு அரசியல் வாதிகள் தடையாக உள்ளனர் என முத்தையா முரளிதரன) கூறியுள்ளார். அவரை வரவேண்டாமென சொன்னது யார்? மக்களுக்கு சேவை



தொடர்ச்சி P2

சென்னை

## கடற்படை அட்டூழியம்: பாம்பனில் மறியல்

இலங்கை கடற்படையின் அட்டூழியத்துக்கு முடிவு கட்டக்கோரி ராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் அறிவித்துள்ளனர். மேலும், பாம்பனில் சாலை மறியல் போராட்டத்தை 18ஆம் திகதி நடத்தவும் திட்டமிட்டுள்ளனர்.



தொடர்ச்சி P2

தமிழ் அரசியல் கட்சிகளை வழிப்படுத்த
## மக்கள் இயக்கமொன்று பலம் பெற வேண்டும்

பு.கஜிந்தன்

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தவரைக்கும் அவர்களின் அரசியல் துறையே தமிழ்த் தேசியக் கட்சிகளின் வழிகாட்டும் பீடமாக இருந்தது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சிறுபான்மையினர் புறக்கணிப்பு

இந்தக் குழுவின் அறிக்கை இரண்டு மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அந்த பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேஜர் பிரதீப் உடுகொட, வஜிர அபேவர்தன, குணதிலக்க ராஜபக்ச சஞ்சீவ எதிரிமான்ன, டி.வீரசிங்க, சுமித் உடுகும்புர, ஜயந்த கடகொட, ஜகத் சமரவிக்ரம, கருணாதாச கொடிதுவக்கு, சட்டத்தரணி மதுர விதானகே, சமன்பிரிய ஹேரத், ஜகத்குமார சுமித்ரா ஆராச்சி, டீ.பீ ஹேரத், கோகிலா ஹர்ஷனி, குணவர்தன உபுல் மஹேந்திர ராஜபக்ச, உதயகாந்த குணத்திலக்க, எச். நந்தசேன, நாலக கோட்டேகொட, குமாரசிறி ரத்நாயக்க மற்றும் சி.பி.ரத்நாயக்க ஆகியோரே கையொப்பமிட்டுள்ளனர்.

எனினும், இந்த விசேட குழுவில், ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த எவருமே உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## “போர் ஒருபோதும் தீர்வாகாது”

பயங்கரவாதத்திற்கு உலகில் எங்கும் இடமில்லை எனவும் போர் ஒருபோதும் தீர்வாகாது எனவும் அவர் தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

சமாதானமிக்க அமைதிப்பூர்வமான தீர்வுகள் மூலமாக இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய முக்கியத்துவத்தையும் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் போர் தொடர்பான அனுபவங்களில் இருந்து சமாதானத்தின் அவசியத்தை பலஸ்தீன தூதருக்கு எடுத்துக் கூறிய மஹிந்த , அமைதியை நிலைநாட்டுவது இரு நாடுகளுக்கும் இடையிலான செழிப்பை உறுதிப்படுத்தும் என்றும் பலஸ்தீன ஒற்றுமைக்கான இலங்கைச் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் என்ற ரீதியில் நான் பலஸ்தீன போராட்டத்திற்கு தொடர்ந்தும் ஆதரவளித்து வருகிறேன். ஆனால் போர் ஒரு போதும் இதற்கு தீர்வாகாது எனவும் மஹிந்த தெரிவித்துள்ளார்.

## மக்கள் இயக்கமொன்று பலம் பெற வேண்டும்

அவர்கள் எதை முன்மொழிந்தார்களோ அதையே எமது கட்சித் தலைவர்கள் வழிமொழிந்தார்கள் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களுக்கான ஒரு தேசியத் தலைமை இல்லாத நிலையில் தமிழ் அரசியற் கட்சிகள் ஒவ்வொன்றும் திக்கொன்றாக அவற்றினது எஜமானர்களின் அல்லது நிதியூட்டு நபர்களின் மனங்கோணாதவாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் கட்சிகளை வழிப்படுத்த மக்கள் இயக்கமொன்று பலம் பெற வேண்டும் என்றார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் ஞாயிற்றுக் கிழமை (15) நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆறுகள் ஒரு போதும் பின்னோக்கிப் பாய்வதில்லை. அது போன்றுதான் வரலாறும் பின்னோக்கிப் பாயாது. வரலாறு எங்களை எந்த இடத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறதோ, அந்த இடத்திலிருந்துதான் வரலாறு தந்த படிப்பினைகளையும் உள்வாங்கிக் கொண்டு நாம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். ஆனால், இந்தக் கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தயாராக இல்லை.

முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் முப்பது, நாற்பது வருடங்கள் பின்னால் சென்று அங்கிருந்து போராட நினைக்கிறார்கள். அதன் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் காலப்பொருத்தமற்று அடிக்கடி அறிவிக்கப்படும் கடையடைப்புப் போராட்டங்களாகும் என்றார்.

## தயாசிறிக்கு புதிய பதவி வழங்குமாறு ஆலோசனை

தயாசிறி ஜயசேகர மீண்டும் கட்சியில் இணைந்தால் கட்சியின் தலைவர், செயலாளர் அல்லது தேசிய அமைப்பாளர் பதவிகளைத் தவிர வேறு பதவிகள் வழங்கப்படலாம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னர் தெரிவித்திருந்தார்.

அதன்படி அவருக்குக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் என கட்சியின் மூத்த தலைவர்கள் குழு பரிந்துரைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர்கள் 6 பேர் உள்ள நிலையில் தயாசிறி ஜயசேகர அப்பதவியைப் பொறுப்பேற்றால் சிரேஷ்ட உபதலைவர்களின் எண்ணிக்கை 7ஆக இருக்கும்.

இதேவேளை, தயாசிறி ஜயசேகர குடும்பத்துடன் வெளிநாட்டில் தற்போது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கடற்படை அட்டூழியம்: பாம்பனில் மறியல்

ராமேஸ்வரத்திலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் 15 பேரை இலங்கை கடற்படையினர் கச்சத்தீவு பகுதியில் வைத்து கைது செய்தனர். தமிழக மீனவர்களிடம் இருந்து 2 விசைப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடல் எல்லை பிரச்சினையைக் காரணம் கூறி இலங்கை கடற்படையினர் தொடர்ந்து அத்துமீறலில் ஈடுபட்டு வருவது தமிழக மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை கடற்படையின் நடவடிக்கையால் தமிழக மீனவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் சூழல் உருவாகியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை கடும் பொருளாதார நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் சூழலில், இந்தியா சார்பில் பல்வேறு உதவிகள் செய்யப்படுகின்றன.

ஆனாலும் இலங்கை கடற்படையின் போக்கில் மாற்றம் தெரிந்தபாடில்லை.

இதனிடையே தமிழக மீனவர்கள் கைதை கண்டித்து ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்துள்ளனர்.

## தீபாவளிக்கு திகா கேட்கிறார்

பழனி திகாம்பரம் கோரிக்கை விடுத்துள்ளார்.
ஹட்டனில் ஞாயிற்றுக்கிழமை (15) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்த கொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், பலரும் போட்டியிட போவதாக அறிவித்தல் விடுகின்றனர். யார் போட்டியிட்டாலும், சஜித் பிரேமதாசவே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவார். மக்கள் ஆதரவு இல்லாதவர்களால் எவ்வாறு வெற்றியீட்டமுடியும்.

ஏனையவர்களை போல, மலையக மக்கள் மத்தியில் சென்று பொய்யான வாக்குருதிகளை கூறி மக்களை நாம் ஏமாற்றும் நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபடமாட்டோம் என தெரிவித்துள்ளார்.

## யாழ். ஜனாதிபதி மாளிகை குத்தகைக்கு விடப்பட்டது

அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு பத்தரமுல்ல நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் தலைமையில் திங்கட்கிழமை (16) இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக, ஜனாதிபதி அலுவலகத்தின் தேசியப் பாதுகாப்பு பிரதம ஆலோசகரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், ஜனாதிபதி மாளிகையை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு (SLIIT) குத்தகைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் அமைந்துள்ள இந்த ஜனாதிபதி மாளிகையின் நிர்மாணப் பணிகள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது 2010-2015 ஐந்தாண்டுகளுக்குள் இருந்தது. இந்த ஜனாதிபதி மாளிகையை நிர்மாணிக்கும் போது புலம்பெயர் தமிழ் மக்களிடம் இருந்து கடும் எதிர்ப்புகள் எழுந்தன. இங்கு கடந்த காலத்தில் கட்டுமான பணிகள் நிறுத்தப்பட்டன. காங்கேசன்துறையில் அமைந்துள்ள இந்த மாளிகை வளாகம் 30 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது, அதில் 12 ஏக்கரில் இந்தக் கட்டிடத் தொகுதிகள் அமைந்துள்ளன.

எஞ்சிய நிலம் அப்பகுதி மக்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்டதுடன், அரசுக்குச் சொந்தமான 12 ஏக்கரை SLIIT நிறுவனத்திற்குக் குத்தகைக்கு விட முதலில் முடிவு செய்யப்பட்டது.

மக்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்ட எஞ்சிய 17 ஏக்கர் காணியை வருமானத்தின் அடிப்படையில் SLIIT நிறுவனத்திற்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT) இந்த ஜனாதிபதி மாளிகையின் பணிகளை விரைவாக முடித்து முழு அளவிலான தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக மாற்றும் என நம்புகிறது. இந்த தகவல் தொழில்நுட்பம் பல்கலைக்கழகம் northern Uni. IT பல்கலைக்கழகமாக உருவாக்கப்படும்.

ஆண்டுதோறும் சுமார் 1,500 மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்கும் திறன் கொண்டது.

மேலும், இந்த தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் கட்டப்பட்டதன் பின்னர், வடக்கிலிருந்து வரும் பிள்ளைகளுக்குத் தகவல் தொழில்நுட்பம் படிக்கக் கொழும்புக்கு வர வேண்டிய அவசியமில்லை. இதன்படி முப்பது வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடமாகாண பிள்ளைகளின் தகவல் தொழில்நுட்ப அறிவு விருத்தியடைந்து அவர்கள் தமது அறிவை பூரணப்படுத்த முடியுமாதலால் அவர்கள் எதிர்கால நவீன உலகிற்குப் பொருந்துவார்கள் என இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT) நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## காக்கைதீவு – சாவக்காடு விவகாரத்துக்கு சுமுக தீர்வு

சம்மந்தப்பட்ட இரண்டு கடற்றொழில் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் பொதுவான இறங்குதுறை மற்றும் மீன் சந்தை போன்ற பொதுவானதாக இருந்து வருகின்ற நிலையில், அவற்றைப் பகிர்ந்து கொள்வது தொடர்பில் ஏற்பட்டிருந்த முரண்பாட்டினையே கடற்றொழில் அமைச்சர் தலையிட்டு சுமுகமாகத் தீர்த்து வைத்துள்ளார்.

குறித்த விவகாரம் அமைச்சரின் கவத்திற்குக் கொண்டுவரப்பட்ட நிலையில், சம்மந்தப்பட்ட காக்கைதீவு பகுதிக்கு நேரடியாகச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இரண்டு தரப்பு கடற்றொழிலாளர்களினது கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

பின்னர், இரண்டு கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளையும் தனது யாழ். அலுவலகத்திற்கு வரவழைத்து மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய, இரண்டு தரப்பினரும் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டு இறங்கு துறையையும் மீன் சந்தை பிரதேசத்தினையும் சுமுகமாகப் பகிர்ந்து கொண்டு தொழிலை முன்னெடுக்கச் சம்மதம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## “இரண்டு தேர்தல்களை தள்ளிப்போட சூழ்ச்சி”

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, உத்தர லங்கா சஹாபய, நிஸ்வ ஜனதா சந்தாயன ஆகிய கட்சிகள் மற்றும் குழுக்கள் இவ்விவகாரத்தில் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு ஒக்டோபர் மாதத்துக்கு முன்னரும், பொதுத் தேர்தலை 2025ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்துக்கு முன்னும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது,

திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்படாவிட்டால், வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் சட்டத்தின் ஊடாக செயற்படக் கட்சிகளும் குழுக்களும் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

மக்களின் இறையாண்மைக்கு அரசாங்கம் சவால் விட முடியாது. என்று சுதந்திர மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அரசாங்கம் இல்லாதொழிக்கும் முயற்சியில் ஜனாதிபதித் தேர்தலையும் ஒத்திவைக்க முயற்சிக்கின்றது என்றார். மாகாண சபைத் தேர்தலையும், உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் பல்வேறு தந்திரங்களைக் கையாண்டு அரசாங்கம் ஒத்திவைத்தது போன்று ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒத்திவைக்க முயற்சிக்கின்றது என்றார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு புதிய தேர்தல் முறைமை கொண்டுவரப்படும் என கூறுவதன் மூலம் அரசாங்கம் உண்மையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கவோ அல்லது புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்தவோ முயற்சிக்கவில்லை, மாறாகத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கவே முயற்சிக்கின்றது.

அரசாங்கம் தன்னிச்சையாகத் தேர்தலை பிற்போடினால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் தீர்மானித்துள்ளதாகவும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேல்-பலஸ்தீனத்தை வலியுறுத்தி கிறிஸ்தவ காங்கிரஸ் போராட்டம்

“இனம், மதம், மொழி ஒற்றுமையைச் சர்வதேச நாடுகள் உருவாக்க வேண்டும்”, “இருதரப்பு அப்பாவி மக்களின் உயிர்களை மதிப்போம்”, “இஸ்ரேல்- பலஸ்தீன் இரு நாடுகளுக்கிடையில் சமாதானம் மலர வேண்டும்” போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவ்வமைப்பின் தலைவர் எஸ்.சிவதர்சன்,

“இஸ்ரேல்- பலஸ்தீன் ஆகிய இரு நாடுகளுக்கிடையில் சமாதானம் கோரி இந்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருக்கிறோம். உங்களுக்குத் தெரியும். இரு நாடுகளுக்கிடையில் நடைபெறுகின்ற யுத்தமானது 3ஆம் உலக யுத்தத்தினை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சத்தினை எங்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

இரு தரப்பினரும் தமக்குள் பேசி நல்ல தீர்வினை எடுக்க வேண்டும். ஏனெனில் பலஸ்தீனம், காசா, இஸ்ரேல் பகுதிகளிலும் இருதரப்பு பொது மக்கள் கொன்றொழிக்கப்படுவதனை ஊடகங்கள் வாயிலாகக் காண்கிறோம். எனவே இருதரப்பினரும் பேசி சமாதான தீர்மானத்தினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இஸ்ரேல்- பலஸ்தீன யுத்தம் முடிவுக்கு வரும்படியாக, சர்வதேச நாடுகள் ஆயுதங்களை மட்டும் வழங்காமல், அதனை நிறுத்திவிட்டு சமாதானத்திற்கு வருவதற்கு உதவ வேண்டும் என்பதையும் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த யுத்தமானது தொடர்ந்து இவ்வாறு நடைபெறுமானால் எந்த அளவுக்கு இரத்த ஆறாக ஓடும் என்பதனைக் கருத்தில் கொண்டே இந்த அமைதிப் போராட்டத்தினை முன்னெடுத்திருக்கிறோம்.

இரு நாடுகளுக்கும் சமாதானம் ஏற்பட வேண்டும் என அனைவரும் பிரார்த்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்” என தெரிவித்துள்ளனர்.

## ஒய்வூதியத்துக்கு சிக்கல்

எதிர்காலத்தில் ஓய்வூதிய கொடுப்பனவு நெருக்கடி ஏற்படுமா என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியதற்கு, அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

## “அரசியலில் பாலியல் இலஞ்சம் கோருபவர்களே அதிகம்”

பெண்களை வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்ப்பதாகவும், பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வேறு நாடுகளில் பெண்களின் விகிதாசாரம் அதிகளவில் இருப்பதாகவும் இலங்கையில் 40க்கும் மேற்பட்ட விகிதாசாரத்தில் பெண்கள் இருக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்காலத்தில் தேர்தலின் போது பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் எப்போதும் பெண்கள் சமையலறையில் இருப்பதை மட்டும் விரும்பவில்லை எனவும் அங்குப் பங்கேற்ற பெண்கள் அதிக அளவில் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## “முரளிதரனுக்கு மாலை போடுவோம்”

செய்ய முன்வாருங்கள், நாங்களே மாலைபோட்டு வரவேற்பளிக்கின்றோம்” என்று இ.தொ.காவின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆனால், தேர்தல் காலத்தில் வாக்குக்காக மட்டும் எவரையாவது அழைத்துக்கொண்டு வருகின்றீர்கள், தேர்தல் முடிந்ததும் எங்களையும் கஷ்டத்தில் தள்ளிவிட்டு, காணாமல் போய் விடுகின்றீர்கள் என்று கூறியுள்ளார்.

“சிறுவர்களுக்கான கனவுகள்” என்ற வேலை திட்டத்தின் கீழ் அவர்களின் நலன் கருதி பூண்டுலோயா பேர்லன்ஸ், ஹெரோ பிரிவில், தலவாக்கலை லோகி, அக்கரகந்தை பெசிபன், இராகலை பிரம்லி, இராகலை தோட்டம் மத்திய பிரிவு, இராகலை லிடஸ்டேல் தோட்டம் ஆகிய பகுதிகளில் நவீன தொழில்நுட்பம் கொண்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் திறந்துவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், “ மலையகத்தில் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் சேவைகளை முன்னெடுக்கின்றன, அவற்றுக்கு எவரும் தடை ஏற்படுத்தவில்லை. மலையகத்துக்குச் சேவை செய்ய முன்வருபவர்கள் இருந்தால் நாம் நிச்சயம் வரவேற்போம். ஆனால் எமது சமூகத்தைப் பிளவுபடுத்தும் நோக்கில் தேர்தல் காலத்தில் மட்டும் வரும் போலிகளை நம்பமுடியாது. தோட்டப்பகுதிக்கு வந்து பார்த்தால்தான் காங்கிரஸ் முன்னெடுத்த சேவைகள் தெரியும். மக்களுக்கு தேவையான சேவைகளை அன்று முதல் இன்றுவரை காங்கிரஸ் வழங்கி வருகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

# நிற கற்களால் ஏமாற்றிய இருவர் கைது



பல்வேறான நிறங்களைக் கொண்ட கற்களை, மாணிக்கக் கற்கள் என காண்பித்து, பலரை ஏமாற்றிய குற்றஞ்சாட்டின் கீழ் தேடப்பட்டுவந்த இருவர் ஹொரண நகரில் சுற்றித் திரிந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 10 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும், நாட்டின் பல பாகங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களிலும் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரான பெண், படபொல பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடையவர் எனவும் மற்றையவர் மத்தல பிரதேசத்தை சேர்ந்த 59 வயதுடையவர் எனவும் தெரிய வந்துள்ளது.

இவ்விரு சந்தேக நபர்களிடமிருந்து வெவ்வேறு போலி கற்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் இந்த சந்தேகநபர்களின் மோசடியில் சிக்கிய நால்வர் ஹொரண பொலிஸில் ஏற்கெனவே முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “20 ஆயிரம் ரூபாவால் அதிகரி”



■ ரஸீன் ரஸ்மின்

2024ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அனைத்து ஊழியர்களின் சம்பளத்தை 20,000 ரூபாவினால் அதிகரிக்க கோரி முந்தல் பிரதேச செயலக ஊழியர்கள் திங்கட்கிழமை (16) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் முந்தல் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நண்பகல் 12.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, “அரச ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தை 20 ஆயிரத்தால் அதிகரியுங்கள்”, “எரிபொருள், சமையல் எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட பொருட்களின் விலைகளை குறையுங்கள்”, “பொருட்களுக்கு விலைகளை அதிகரிக்கும் போது அரச ஊழியர்களை கவனத்தில் கொள்ளுங்கள்” என்று பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியும் அரச உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பாக்கு படாரென வெடித்ததில் பெண் காயம்



■ ஆ.ரமேஸ்

கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூப்பனை தோட்ட தேயிலை மலையில் பாக்கை தட்டியதில் படாரென வெடித்ததில் (52) வயது பெண் தொழிலாளி ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த தொழிலாளி, நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பூப்பனை தோட்ட விளையாட்டு மைதானத்திற்கு அருகில் நூறு மீட்டர் தூரத்தில் காணப்படும் வீதியின் மேற்பகுதியில் உள்ள தேயிலை மலையில் இந்த வெடிப்பு சம்பவம் திங்கட்கிழமை (16) காலை இடம்பெற்றுள்ளதாக கந்தப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கோகில ஆரியதாஸ தெரிவித்துள்ளனர்.

தனக்கு ஒதுக்கப்பட்ட தேநீர் இடைவேளையின் போது தேநீர் அருந்திவிட்டு வெற்றிலை போடுவதற்கு தேயிலை மலையில் உள்ள கல் ஒன்றில் பாக்கு உடைக்க முற்பட்டுள்ளார். அந்தக் கல்லுக்கு கீழ் இருந்ததாக கூறப்படும் “ஹக்கப்பட்டாஸ்” வெடித்து காயங்கள் ஏற்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு வெடித்த வெடி “ஹக்கப்பட்டாஸ்” என்று சொன்னாலும் இதில் சந்தேகம் உள்ளதாக தெரிவித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, இது தொடர்பாக சோதனையும், விசாரணையையும் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

பூப்பனை மேல்பிரிவு தோட்ட தேயிலை மலைகளில் அதிகமான காட்டு பன்றிகள் நடமாடுவதாகவும் இதனால் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழில் கேக் வெட்டியவர்களுக்கு சிக்கல்



**மக்களின் இயல்வு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன், மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் களிப்பில் ஈடுபட்டவர்க்ளை கைது செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது**

யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்து, அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாக பிறந்தநாள் கொண்டாடிய கும்பலை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு 50 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்த 150 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள், அண்மையில் ஒன்று கூடி தமது கும்பலைச் சேரந்த ஒருவரின் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடியுள்ளனர்.

அதனை டிக்டொக் போன்ற சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தும் உள்ளனர்.

பிறந்தநாள் கொண்டாடிய இளைஞர்களின் செயற்பாடானது வீதியில் சென்ற பொதுமக்கள் மற்றும் பேருந்து நிலையத்தில் இருந்தவர்கள் மத்தியிலும் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாக இருந்ததாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு தொலைபேசி ஊடாக அறிவிக்கப்பட்ட போதிலும், பொலிஸார் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை.

சம்பவம் தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்ததையடுத்து, சட்டவிரோதமான முறையில் கூட்டம் கூடி, மக்களின் இயல்வு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன், மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் களிப்பில் ஈடுபட்டவர்க்ளை கைது செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இருவரை கைது செய்து 14ஆம் திகதி சனிக்கிழமை நீதவான் முன்னிலையில் முற்படுத்தி இருந்தனர். அவர்களை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான், சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரையும் கைது செய்து முற்படுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

# மோதலை முடிவுக்கு கொண்டுவருமாறு போராட்டம்



■ வா.கிருஸ்ணா

இஸ்ரேல் -பலஸ்தீன மோதலை முடிவுக்கு கொண்டுவந்து அப்பகுதியில் நிலை நாட்டுமாறு கோரி கவனஈர்ப்பு போராட்டமொன்று மட்டக்களப்பில் திங்கட்கிழமை (16) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் அமைப்பின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு ஊடகவியலாளர்களால் நினைவுத்தூபிக்கு முன்பாக இந்த போராட்டத்தை முன்னெடுக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் காரணமாக தொடர்ந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் இறக்கும் நிலைமையினை தடுப்பதற்கு சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகள் இரு நாடுகளுக்கும் ஆயுதங்கள் வழங்குவதை விடுத்து யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்கவேண்டும் என்ற கோரிக்கை இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.



# மண் சரிவால் போக்குவரத்து பாதிப்பு

■ செ.திவாகரன்



நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் சீரற்ற வானிலையைத் தொடர்ந்து நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா, ரதல்ல குறுக்கு வீதி ஆரம்பமாகும் லேங்டல் பகுதியில் ஏற்பட்ட மண் சரிவால் அந்த வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

குறித்த வீதியின் ஒரு மருங்கில் மாத்திரம் போக்குவரத்து இடம்பெறுவதாகவும், மண் மேட்டை அகற்றும் பணியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஈடுபட்டுள்ளதாகவும் நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், நுவரெலியா-ஹட்டன் பிரதான வீதியில் பல இடங்களில் மண்சரிவு ஏற்படுவதற்கு அபாயகரமான வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதால் அப்பாதையில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# வீதி விபத்தில் ஒருவர் பலி

■ யது பாஸ்கரன்

கிளிநொச்சியில் ஞாயிற்றுக்கிழமை (15) இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி - பூனகரி பிரதேசத்துக்குட்பட்ட வேரவில் பிரதான வீதியின் வேரவில் மருத்துவமனைக்கு அன்மித்த பகுதியில் உழவு இயந்திரம் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பூநகரி பிரதேசத்தின் வலைப்பாட்டைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 32 வயதுடைய சிதம்பரநாதன் வர்மகுமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தின்போது படுகாயமடைந்த அவர், முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் ஜெயாபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மனைவி கொலை; கணவர் கைது

■ எம்.றொசாந்த், நிதஷன் வினோத்

யாழ்ப்பாணம் - நாவற்குழி பகுதியில் மனைவியை கொலை செய்து விட்டு தப்பிச் செல்ல முற்பட்ட குற்றச்சாட்டின் கீழ் அவரது கணவன் பொலிஸ் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவற்குழி ஐயனார் கோயிலடியில் வசிக்கும், இரண்டு பிள்ளைகளின் தாயான அஜந்தன் யமுனா (வயது 23) கொலை செய்யப்பட்ட நிலையில் திங்கட்கிழமை (16) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வீட்டில் கணவனைக் காணாத நிலையில், அவரை பொலிஸார் தேடி வந்துள்ளனர்.

இந்நிலையில், யாழ். மாவட்ட செயலகத்திற்கு அருகில் வைத்து, முச்சக்கரவண்டியில் சந்தேகநபர் தப்பிக்க முற்பட்டவேளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணை முன்னெடுக்கப்பட்ட நிலையில், “தான் மனைவியை தாக்கிய பின்னர், வீட்டை விட்டு வெளியேறி விட்டதாகவும், மனைவி உயிரிழந்தது தனக்குத் தெரியாது” எனவும் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.


# அமானுஷ்யமான சத்தத்தால் மக்கள் பீதி

■ டிசந்ரு, எஸ்.கே.குமார்

மனிதத் தொடர்பு இல்லாத, மனிதப் புலன்களுக்கு அப்பாற்பட்ட, மனித சக்திக்கு மீறியதே அமானுஷ்யமாகும். அவ்வாறு நிலத்தின் கீழ் அமானுஷ்யமான சத்தம் கேட்பதால் மக்கள் அச்சத்துடன் இருக்கவேண்டிய நிலைமை நுவரெலியாவில் இடம்பெற்றுள்ளது.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள கொத்மலை வேத்தலாவ எனும் கிராமத்தில் நிலத்தின் கீழ் நீர் செல்வது உட்பட பல்வேறு விதமான அமானுஷ்யமான சத்தம் கேட்பதாக கிராம மக்கள் தகவல் கொடுத்துள்ளனர்.

அந்த தகவலுக்கு அமைய அக்கிராமத்தில் வசிக்கும் 50 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இரவு நேரத்தில் மட்டும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க ஞாயிற்றுக்கிழமை (15) முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்துள்ளார்.



**கொத்மலை வேத்தலாவ எனும் கிராமத்தில் நிலத்தின் கீழ் நீர் செல்வது உட்பட பல்வேறு விதமான அமானுஷ்யமான சத்தம் கேட்பதாக கிராம மக்கள் தகவல் கொடுத்துள்ளனர்**

கொத்மலை வேத்தலாவ கிராமத்தில் வாழும் மக்கள் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு அமைய இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்துள்ளார்.

இந்த கிராமமானது மலைகள் அற்ற ஒரு சமவெளிப் பகுதியில் கொத்மலை நீர்தேக்கத்திற்கு அருகிலும் அமைந்துள்ளதாகவும் தெரிவித்த நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, அங்கு வழமையாக நிலத்துக்கு கீழ் இருந்து பல்வேறு சத்தங்கள் கேட்பதாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.

இந்நிலைமையானது அச்சப்படுவதற்கான காரணியாக இதுவரை அடையாளம் எதுவும் காணப்படவில்லை. எனவும், எனினும் நுவரெலியா மாவட்ட கட்டிடம் மற்றும் நிலம் ஆய்வு மைய அதிகாரிகளின் உதவியோடு குறித்த கிராமம் தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுக்க நடவடிக்க எடுக்கப்படவுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட மேலும் தெரிவித்துள்ளார்.



# அலைபேசிகளை பயன்படுத்த தடைவிதிக்கும் சட்டம் அவசியம்

ஒவ்வொரு துறைகளுக்குள்ளும் கருப்பு ஆடுகள் இருப்பதை எளிதில் எவரும் மறுக்கமுடியாது. சில சினிமா படங்களை பார்த்தோமெனில், அக்காட்சிகளில் கருப்பு ஆடுகள் எவ்வாறு இரகசிய தகவல்களை எதிர்த்தரப்பினருக்கு கொடுக்கின்றன. அதற்காக அவர்களுக்கு வழங்கும் சன்மானங்கள் பற்றி அறிந்திருப்போம். ஒருசில தருணங்களில் கையும் களவுமாக சிக்கியும் கொள்வர்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், பல நிறுவனங்களின் உள்ளக தகவல்களை உள்ளே இருக்கும் ஒரு சிலர் வெளியில் கசியவிட்டு விடுகின்றனர். இதுவே யதார்த்தமாகும். எனினும், தீர்மானங்களை எடுக்கும் மட்டங்களில் இருக்கும் அதிகாரிகள் எவ்வளவுதான் இரகசியம் காத்தாலும், இரகசியம் அம்பலமாகிவிடுகின்றது.

பரீட்சைகளை பொறுத்தவரையில், மாகாண மட்டங்களில் நடக்கும் பரீட்சைகளில் வினாத்தாள்கள் பரீட்சை ஆரம்பிக்கும் சில தினங்களுக்கு முன்னதாகவே கசியவிடப்பட்டு விடுகின்றன. இதனால், இராப்பகலாக கண்விழித்து கற்ற பரீட்சார்த்திகளை விடவும், ஏனையவர்கள் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்று, பெற்றோரிடத்திலும் பாடசாலையிலும் ஏன்? ஆசிரியர்கள், பிரத்தியேக வகுப்புகளிலும் பாராட்டுகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

நன்றாக கற்றவர்களுக்கு அது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அவ்வாறானவர்களை சமாதானப்படுத்துவது பெரும் சிரமமாகவே இருக்கும். எனினும், தேசிய பரீட்சைகளில் இவ்வாறான சேட்டைகளை விடமுடியாதென ஆறுதல் கூறி, ஓரளவுக்கு அவர்களின் மனங்களை தேற்றலாம்.

எனினும், கசியவிடப்பட்ட வினாத்தாள்களுக்கு முன்கூட்டியே விடைகளை எழுதி, முன்தேர்ச்சி பெற்ற பரீட்சார்த்திகள் தேசிய பரீட்சைகளில் எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற தவறிவிடுகின்றனர். நடந்துமுடிந்த ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்கள் பரீட்சை நிறைவடைந்த இரண்டொரு மணிநேரத்துக்குள் சமூக வலையத்தளங்களில் கசியவிடப்பட்டன. இதனை எந்தவொரு பரீட்சார்த்தியாலும் செய்யவே முடியாது. ஏனெனில், வினாத்தாளிலேயே விடையளித்து, பரீட்சை நிலையங்களின் மேற்பார்வையாளர்களிடம் கையளிக்கவேண்டும்.

பரீட்சையின் பின்னர் சமூக ஊடகங்களில் வினாத்தாள்கள் வெளியாகியிருப்பதன் மூலம் பரீட்சையின் இரகசியத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத போதிலும், அது பிள்ளைகளின் மன நிலையைப் பாதிக்கக் கூடும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சை முடிந்து முடிவுகள் வெளியாகும் வரை பரீட்சை வினாத் தாள்கள் பரீட்சை திணைக்களத்துக்குச் சொந்தமான இரகசிய ஆவணங்கள் மற்றும் அதற்கு முன்னர் அவற்றை வெளிப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

வினாத்தாள்கள் ஒவ்வொன்றிலும் பரீட்சார்த்திகளின் சுட்டெண்கள் அச்சிடப்பட்டே வருகின்றன. புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகளால், வினாத்தாள்களைப் பரீட்சை மண்டபத்துக்கு வெளியே எடுத்துச் செல்லவே முடியாது.

ஆகையால், பரீட்சை மண்டபங்களில் மேற்பார்வையாளராகக் கடமையில் இருந்த யாரோ ஒருவர்தான், இவ்வாறு கசியவிட்டிருக்கலாம். அவர்களே கருப்பு ஆடுகளாக இருந்திருக்கலாம். ஆகையால், பரீட்சை மண்டபங்களில் அலைபேசிகளைப் பயன்படுத்துவதைத் தடைவிதிக்கும் வகையிலான சட்டங்களே அவசியம்.


# தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

உங்கள் நெஞ்சத்தை நீங்களே உடைத்து, உங்களை குற்றவாளி ஆக்கவேண்டாம். தேவையற்று எதற்கும் சலனப்பட்டு கலங்குவது நிறுத்தப்பட வேண்டும். துணிச்சல் இன்றேல் வாழ்வில் இனிமை துலங்காது.

பிறர் கூறும் கடுஞ்சொற்களைக் காதுகொடுத்துக் கேட்டலாகாது. இத்தகையவர்கள் வேண்டுமென்றே மனதைக் கலைத்துவிடும் செய்திகளைச் சொல்வதுண்டு.

மேலும் குடும்பத்தில் கோபத்தைக் காட்டலாகாது. நிதிப் பிரச்சினை, அலுவலகப் பிரச்சினை எனப் பலதரப்பட்ட அழுத்தங்களை அநேகர் அனுபவித்து வருவதுண்டு.

எந்தப் பாரிய பிரச்சினைகளையும் உடைக்க முடியும். திட்டமிட்டு கருமங்களை ஆற்றுக! உங்களுக்கு நீங்களே எஜமானன். மறக்க வேண்டாம்!

உங்களுக்கு எனப் பல கடமைகள் உண்டு. அவை பாரமானது என எண்ணினால், சின்ன விடயங்களும் பெரும் பாரமாகி விடும்.

எப்பொழுதும் மனததை இலேசாக்கி, அனைவரிடமும் சகஜமாகப் பழகினால், அழுத்தங்கள் குறைந்துவிடும். வாழ்க்கையை இரசித்தால் நிம்மதி நிச்சயம்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## அடைக்கலம் கொடுத்த பலஸ்தீனம் மீதான

# இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு போர்

மொஹமட் பாதுஷா

இஸ்ரேல் - பலஸ்தீனத்திற்கு இடையிலான யுத்தமும், அதனால் அகன்ற பலஸ்தீனத்தில் இடம்பெறுகின்ற மனிதப் பேரவலங்களும் உலக மக்களுக்கு பெருங் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

சுருங்கக் கூறின், ஒரு மக்கள் கூட்டம் குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்பில் தஞ்சம் கோரி, அங்கு குடியேறிய பின்னர் அதற்கு அருகேயுள்ள நிலங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டு பூர்வீக உரிமையாளர்களை விரட்டியக்க முனைகையில், குடியேறிகளுக்கும் அந்த நிலத்தின் பரம்பரை உரிமையாளர்களுக்கும் இடையில் நடக்கின்ற ஒரு யுத்தம்தான் இது.

ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டதன் முக்கியமான நோக்கம், இன்னுமொரு உலக யுத்தம் இடம்பெறுவதைத் தடுப்பதாகும். அதனை ஐ.நாவும் அதுசார்ந்த நிறுவனங்களும் செவ்வனே செய்திருக்கின்றன. இருப்பினும், அங்குமிங்குமாக அதைவிடப் பெரிய மனிதப் படுகொலைகளும் தொடர் யுத்தங்களும் நடந்தேறியுள்ளன.

உலக மகா யுத்தங்களுக்குப் பிறகு பல்வேறு பெயர்களில் நடைபெற்ற போர்களில் கூட உலக நீதி என்பது குருட்டுத்தனமாக, ஒரு பக்கச் சார்பானதாகவே இருந்திருக்கின்றது என்று கூறுவதற்கு றிறையவே சரித்திரக் குறிப்புக்கள் ஆதாரங்களாக உள்ளன.

அகன்ற பலஸ்தீனத்தில் அதாவது 1948 இற்கு முன்பிருந்த பலஸ்தீன நிலப்பரப்பில் முக்கால் நூற்றாண்டாக உயிரிழப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதுதவிர, பொஸ்னியா, செச்னியா, வளைகுடா, ஈராக், சிரியா, துருக்கி, லிபியா, ஆப்கானிஸ்தான் என பல நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இடம்பெற்ற மனிதப் பேரவலங்களை ஐ.நாவோ உலக நீதியைக் காப்பாற்றுவதாக சொல்கின்றவர்களோ தடுத்து நிறுத்தவில்லை.

மியன்மார், இந்தியா, சீனா, இலங்கை போன்ற நாடுகளில் சிறுபான்மையினருக்கு நடக்கின்ற அநியாயங்கள் விடயத்திலும் கிடத்தட்ட இதுதான் யதார்த்தமாக உள்ளது.

ஏனெனில் நீதி, நியாயம், மனிதாபிமானம் என்ற விடயங்கள் பொதுவெளியில் முன்வைக்கப்பட்டாலும், உண்மையில் திரைக்குப் பின்னால் வேறு பல உலக அரசியல், இராணுவ, ஆதிக்க, மதம்சார் காரணங்கள் செல்வாக்குச் செலுத்திக் கொண்டே இருக்கின்றன.

இந்தப் பின்னணியில் நோக்கும்போது. பலஸ்தீன நிலப்பரப்பில் இஸ்ரேல் என்றொரு நாட்டை பிரகடனம் செய்த ஐ.நாவும், உலக நாட்டாமைகள் போல தோற்றம் காட்டுகின்ற அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளும் நீதமாக நடந்து கொண்டுள்ளனவா? அல்லது நீதி விடயத்தில் காஸாவிலும் தோல்வி கண்டுள்ளனவா என்ற கேள்வி எழுகின்றது.

இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் பற்றி பூரணமாக விளங்கிக் கொள்வதாயின் இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றைப் படிக்க வேண்டும். குறைந்தது 75 வருடகால சரித்திரக் குறிப்புக்களையாவது தெரிந்திராமல், வெறுமனே இப்போது நடக்கின்ற சம்பவங்களை மட்டும் வைத்துக் கொண்டு நியாயம் சொல்லவோ, தீர்ப்பெழுதவோ முடியாது.

இந்த முரண்பாடு நீண்டகால மதப் பின்னணியைக் கொண்டது. முஸ்லிம்களுக்கும் (அரேபியர்களுக்கும்) யூதர்களுக்கும் இடையிலான ஆரம்பகால முரண்பாடுகளில் இருந்து தொடங்கியது. இதேபோன்ற முரண்பாட்டை யூதர்கள் விடயத்தில் கிறிஸ்தவர்களும் கொண்டிருந்தனர் எனலாம்.

இஸ்லாமிய மார்க்கம் மட்டுமன்றி, வேறு சில மதங்களிலும் முன்னறிவிக்கப்பட்டதன்படி உலகின் கடைசி நாள் வரைக்கும் இந்த பிராந்தியத்தில் யுத்த மேகம் சூழ்ந்திருக்கும் எனவும் இஸ்லாமிய மார்க்கம் நிலைநிறுத்தப்பட்டு அந்த மண் வெற்றிகொள்ளப்படும் எனவும் கூறப்படுகின்றது. இதனை குறிப்பாக முஸ்லிம்கள் முழுமையாக நம்புகின்றனர்.

பலஸ்தீனமும் அதனைச் சூழவுள்ள எகிப்து, ஜோர்தான், சிரியா, லெபனான் போன்ற நாடுகளை உள்ளடக்கிய நிலப்பரப்பு என்பது சாதாரணமானதல்ல. உலக சரித்திரத்தில் நாம் படித்த பல நாகரிகங்கள் இங்கு தோற்றம் பெற்றிருக்கின்றன. குறிப்பாக இஸ்லாமிய வரலாற்றில் ஒரு புனித பூமியாகும். மக்கா, மதினாவுக்கு அடுத்த இடத்தில் இங்குள்ள பைத்துல் முகத்தஸ் எனப்படும் மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசல் உள்ளது.

எனவேதான், பலஸ்தீனம் என்பது, ரஷ்ய ஜனாதிபதி புடின் சொல்லியிருப்பதைப் போல 'உலகில் உள்ள அனைத்து முஸ்லிம்களினதும் உணர்வில் கலந்த' விடயமாகும். எனவே, அரபு நாடுகள் ஏனைய மோதல்களைப் போல இதனையும் கண்டும் காணாமல் இருக்க முடியாத நிலையுள்ளது.

யூதர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ்கின்ற போதிலும் 1948 ஆண்டுக்கு முன்னர் உலக வரைபடத்தில் இஸ்ரேல் என்று ஒரு நாடே இருக்கவில்லை. ஆனால், இன்றிருப்பதைப் போலவே பல முஸ்லிம் நாடுகள், இருந்தன. பலஸ்தீனம் என்ற அகன்றதொரு நாடு இருந்தது.

சாம் தேசம், உஸ்மானியப் பேரரசு ஆகியவற்றில் உள்ளடங்கியிருந்த பலஸ்தீனம் பின்னர் தனியொரு நாடானது. ஒரு நாட்டுக்குரிய எல்லாமும் அங்கிருந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. அங்கு இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் மட்டுமன்றி ஏனைய மதப் பிரிவைச் சேர்ந்த சிலரும் நிம்மதியாக இருந்தனர்.

இப்படி பலஸ்தீனர்கள் இருந்த காலப்பகுதியில், யூதர்கள் வசிப்பதற்கு நிரந்தர இடம் அற்றவர்களாக, நாடோடிகளாக, அங்குமிங்கும் அலைந்து திரிந்தனர். இதற்கு அடிப்படைக் காரணம் யூதர்கள் குழப்பவாதிகளாக, ஆக்கிரமிப்பவர்களாகப் பார்க்கப்பட்டார்கள். அதனால், அருசிய, பாபிலோனிய காலம் தொட்டு ஹிட்லர் காலம் வரை துரத்தியடிக்கப்பட்டார்கள்.

எல்லா மதங்களும் அமைதியையே போதிக்கின்றன. அந்த வகையில் மனிதர்கள், மனிதாபிமானம் என்ற அடிப்படையில், இன்று கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்ற பலஸ்தீனியர்களையும் இஸ்ரேலில் வாழ்கின்ற ஒன்றுமறியா அப்பாவிகளையும் ஒரே கண்கொண்டு பார்க்க வேண்டும்.

சமகாலத்தில், யூத சியோனிஸ்டுகளாலும் அவர்களால் இயக்கப்படுகின்ற அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளாலும் இன, மத அடிப்படையில் ஒடுக்கப்படுகின்ற பலஸ்தீன மக்களின் நியாயங்களைப் புரிந்து கொண்டு நிலைமைகளை அலச வேண்டியுள்ளது.

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பிறகு, யூதர்களுக்கு ஒரு நாடு, தனியான நிலப்பரப்பு தேவை என்ற கருத்தியல் மேலெழுந்தது. இதற்குப் பின்னால் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் இருந்தன. பல பிராந்தியங்கள் இதற்காக பரிசீலிக்கப்பட்டன. சில நாடுகள் யூதர்கள் குடியேற இடமளிக்கவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில், பலஸ்தீனர்கள் உள்ளடங்கலாக அரபுலகின் முஸ்லிம்கள்தான் யூதர்களின் விடயத்தில் மனம் இரங்கினார்கள். அன்று அரபுலகம் என்பது மிகப் பலமானது. விரும்பினால் துரத்தியடித்திருக்கலாம். ஏன் பலஸ்தீனர்களே எதிர்த்திருக்கலாம். ஆனால், அவர்கள் அப்படிச் செய்யவில்லை. 'நமக்கு பெருமளவு நிலம் உள்ளதுதானே, அதில் இந்த மக்களும் வாழ்ந்து விட்டுப் போகட்டும்' என்று நினைத்தவர்கள் இந்த முஸ்லிம்களே !

இதனைத்தொடர்ந்து அங்கு பெருமளவான யூதர்கள் குடியேற்றப்பட்டார்கள். நாடோடிகளாக இருந்த யூத மக்களும் வந்து குடியமர்ந்தனர். அதுவரை எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை என்பது இங்கு கூர்ந்து கவனிக்க வேண்டும்.

இந்த நிலையில், ஸ்தாபிக்கப்பட்டு மூன்று வருடங்களே ஆகியிருந்த ஐ.நா. சபை இதில் ஒரு வகிபாக்தை எடுத்தது எனலாம். அதன்படி, யூதர்கள் மற்றும் இஸ்லாமியர்களைக் கொண்ட இரு தேசங்களை பிரகடனப்படுத்தும் தீர்மானத்தை அறிவித்தது. அதன்படி இஸ்ரேல் என்றொரு தேசம் உடனடியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில்தான் பலஸ்தீனர்கள் முதன்முதலாக முரண்படத் தொடங்கினார்கள். எனவே, ஐ.நாவுடன் மேற்குலகம் சேர்ந்து கொண்டு ஒரு சூழ்ச்சியை, நகர்வைச் செய்வதாகக் கூறி போராடத் தொடங்கினர். தாம் வழங்கிய நிலத்திற்குள் புதிய நாடு உருவாவதும், அதற்காக முஸ்லிம்களின் எதிரி நாடுகள் முன்னிற்பதையும் யாரும் ஏற்க மாட்டார்கள்தானே.

இவ்வாறான நிலையில், இஸ்ரேல் ஒரு வருடத்திலேயே ஐ.நாவில் உறுப்புரிமை பெற்றது. பலஸ்தீனத்தை அங்கீகரிக்க முன்னதாக இஸ்ரேலை அங்கீகரித்தமை மிகப் பெரிய அதர்மமாகும். இது விடயத்தில் ஐ.நாவும் பிரிட்டன், அமெரிக்க நாட்டாமைகளும் சரியாக நடந்து கொண்டதாக சொல்ல முடியாது.

அதுமட்டுமன்றி, இன்று வரை பலஸ்தீனம் என்பது ஐ.நாவில் ஒரு தனிநாடாக அங்கீகரிக்கப்படவில்லை. 2012ஆம் ஆண்டுதான் அதாவது இஸ்ரேலுக்கு உறுப்புரிமை அந்தஸ்து கிடைத்து 60 வருடங்களுக்குப் பிறகுதான் பலஸ்தீனம் என்ற நாட்டுக்கு அதுவும் 'பார்வையாளர் அந்தஸ்தை' ஐ.நா. வழங்கியுள்ளது. இதிலுள்ள நியாயம் என்னவென தெரியவில்லை.

'அனைத்துப் பலஸ்தீன அரசு', 'பலஸ்தீன சட்டப் பேரவை நாடாளுமன்றம்' என்ற பல ஜனநாயகப் பொறிமுறைகளை உலகம் அங்கீகரிக்கவில்லை. அதற்குப் பின்னர் யசீர் அரபாத் தலைமையில் பலஸ்தீன விடுதலை இயக்கம், பிறகு ஹமாஸ் என போராட்டங்கள், இயக்கங்கள் எதனை வேண்டி நிற்கின்றன என்பதை விளங்கிக் கொண்டு அந்த மக்களுக்கான இறைமையை வழங்கவில்லை.

இஸ்ரேலுக்கு இடம்கொடுத்த பலஸ்தீனம் இன்னும் ஒரு சுயாட்சி பிரதேசமாகவே இருக்கின்றது. அங்குள்ள மக்களின் கோரிக்கையை மூடிமறைத்துவிட்டு, ஆயுத அமைப்புக்களை காரணம் காட்டி அங்கு மோதலையும், ஆக்கிரமிப்பையும் கடந்த 75 ஆண்டுகளாக இஸேரலும் கூட்டாளிகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்படி பலஸ்தீன மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல், அந்த மக்களுக்கான தேசத்தை அங்கீகரி;க்காத உலக நாடுகளும், அறிக்கை மட்டுமே விட்டுக் கொண்டிருந்த ஐ.நா. உள்ளிட்ட அமைப்புக்களும்தான் இன்று எல்லாம் தலைக்கு மேலால் போகின்ற சூழலில் நீதி, அமைதி பற்றி நீலிக் கண்ணீர் வடிக்கின்றன. இதுதான் உலக ஒழுங்கின் யதார்த்தமுமாகும்.

## கடிதங்கள்

# ஓடிய பஸ் ஓடவில்லை

சாமிமலை நகரிலிருந்து மஸ்கெலியா ஊடாக கண்டி வரை சுமார் 60 வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த இலங்கை போக்குவரத்து சபையின் ஹட்டன் டிப்போவுக்குச் சொந்தமான பஸ் சேவை, கடந்த ஒரு மாதகாலமாக இயங்கவில்லை. இதனால், பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

சாமிமலை நகரிலிருந்து அதிகாலை 4.30 மணியளவில் புறப்பட்டு மஸ்கெலியா, நோர்டன்பிரிட்ஜ், கினிகத்தேன, நாவலப்பிட்டி, கம்பளை ஊடாக கண்டி நோக்கி பயணித்த இந்த பஸ்ஸில் நாவலப்பிட்டி, பேராதனை, கண்டி பொது வைத்தியசாலைகளுக்கு தினமும் ஏராளமான நோயாளர்களும், அவர்களுடைய உறவினர்களும், நோயாளர்களை பார்வையிட சென்றவர்களும் பயணித்தனர்.

பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பற்றாக்குறை என கூறி அவ்வப்பொழுது சேவையில் இருந்து விலக்கி கொள்ளப்படுவதாக அப்பகுதி பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பள்ளி மாணவர்கள், அலுவலக பணியாளர்கள் என ஏராளமான பயணிகளுக்கு வசதியாக இருந்த இந்த பஸ், கடந்த ஒரு மாதமாக இல்லாததால் மிகுந்த சிரமத்துக்கும், அவதிக்கும் உள்ளாகியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பஸ் சேவையின் அவசியத்தை ஹட்டன் லங்காம டிப்போ அதிகாரிகளிடம் பலமுறை சுட்டிக்காட்டியும் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

காமினி பண்டார இலங்கத்திலக்க



# வன்முறையை தூண்டும் கேம்ஸ்



மரியதாசன் பூவியர் லூட்ஸ் நிவேதிகா
(இரண்டாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

உலகளாவிய ரீதியில் வீடியோ கேம்கள் வயது வேறுபாடு இன்றி பிரபலமாக அனைவராலும் விளையாடப்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டு களுக்காக ஒவ்வொரு நாளும் பல மணி நேரங்கள் செலவழிக்கப்படுவதுடன், வீடியோ கேம்கள் இன்று ஒரு போதைப்பொருள் போல பலரை அடிமையாக்கி விட்டது எனலாம். கேமிங் தொடர்பான 2023ஆம் ஆண்டிற்கான புள்ளி விபரங்களின் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் சுமார் மூன்று பில்லியனுக்கும் அதிகமானோர் வீடியோ கேம்களை விளையாடுகின்றனர் என்று தரவுகள் குறிப்பிடுகின்றன. இவர்களில் 38 சதவீதமானோர் 18 தொடக்கம் 34 வயது பிரிவினராக காணப்படுகின்றனர்.

வீடியோ கேம்களின் வடிவமைப்பானது, விளையாடுபவரை அடிமையாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், விளையாட்டினுள் பல படிநிலைகள், ஒவ்வொரு நிலைக்கும் பரிசுகள், கண்ணை கவரும் விதத்திலான அனிமேஷன்கள், தினமும் விளையாடுவோருக்கு சிறப்பு பரிசுகள் என பயன்படுத்தப்படும் நுட்பங்கள் விளையாட்டின் மீதான ஆர்வத்தை அதிகரிப்பதுடன், விளையாட்டில் ஈடுபடவும், அதிகளவான நேரத்தை இதற்காக ஒதுக்க வேண்டும் எனும் எண்ணத்தையும் தூண்டுகின்றன.

சிறுவர்கள் பல மணி நேரம் ஒரே இடத்தில் அசையாமல் உட்கார்ந்தபடி வீடியோக்கள் பார்ப்பது, வீடியோ கேம்ஸ் விளையாடுவது போன்றவற்றால் முதுகு எலும்பு, தசைகளுடன் தொடர்புடைய நோய்கள் ஏற்படுவதுடன், நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர்ந்தபடி தொடுதிரையை விரல்களால் தேய்த்துக் கொண்டிருக்கும் பழக்கம் விரல்கள், கைகள், கால்கள் போதுமான இயக்க பயிற்சியை பெற முடியாமையினால், அவை திடமான வளர்ச்சி பெறுவதில்லை. இது குழந்தைகளுக்கு சிறு வயதில் எழுதுவது மற்றும் நடப்பதில் பல்வேறு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன.

வீடியோ கேம்களில் சாகசம், வன்முறையை தூண்டும் அம்சங்கள், பாலியல் சார்ந்த விடயங்கள் என பல்வேறு உள்ளடக்கங்கள் காணப்படுவதினால் பெரும்பாலான இளைஞர்கள் வீடியோ கேம்களின் வசம் ஈர்க்கப்படுகின்ற தன்மை காணப்படுகின்றது. வன்முறை சார்ந்த அம்சங்களில் ஒருவரை துப்பாக்கியால் சுடுதல், அடித்தல், காயங்களுக்கு உட்படுத்தல், வெடிகுண்டுகளை வீசி தகர்த்தல், போதைப்பொருட்களை பயன்படுத்துதல் போன்றவை இடம்பெறுகின்றன. இவை இளைஞர்கள் மத்தியில் உள ரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், வன்முறை உணர்வை தூண்டுவதாகவும் காணப்படுகின்றன.

ஹார்வர்டு பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில், வன்முறை கலந்த வீடியோ கேம்களில் மூழ்கும் குழந்தைகள் வன்முறை எண்ணங்கள் கொண்டவர்களாக இருப்பதோடு, இவர்கள் எதிர்காலத்தில் வன்முறையில் ஈடுபடுவதற்கும் வாய்ப்புகள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. பெற்றோர்களின் கண்காணிப்பற்ற குழந்தைகள் இதில் அதிக பாதிப்பிற்கு உள்ளாகின்றனர்.

AdColony என்ற உலகளாவிய மொபைல் விளம்பர தளம், இலங்கையில் 4 மில்லியன் செயலில் உள்ள மொபைல் கேம்ஸ் விளையாடுபவர்கள் உள்ளனர் என்றும் அவர்களில் 20 சதவீதம் நேரத்தை மொபைலில் கேமிங்கில் செலவிடுகிறார்கள் என்றும் gamer.lk தளத்தில் சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்கள், 18 முதல் 24 வயதுக்குட்பட்ட 2 முதல் 3 மில்லியன் இலங்கை இளைஞர்கள் கேமிங்கில் ஆர்வமாக உள்ளனர் என்றும் குறிப்பிடுகின்றது.

இவ்வாறான காரணங்களால் குடும்பத்துடன் நேரம் செலவிடாமல் நாள் முழுவதும் விளையாட்டுகளில் ஈடுபடுவதால் தூக்கமின்மை, மன அழுத்தம் உடல், உள ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுவதுடன், அதிக அழுத்தம் காரணமாக தற்கொலை செய்தல், வன்முறைகளிலும் ஈடுபடுகின்றனர்.

இலங்கையிலும் வீடியோ கேம்களுக்கு அடிமையான பல்கலைக்கழக மாணவி தற்கொலை, வீடியோ கேம் விளையாடுவது தொடர்பாக குழுக்களுக்கு இடையில் மோதல், வீடியோ கேம் விளையாட அனுமதிக்காததால் மாணவன் தற்கொலை போன்ற வீடியோ கேம் விளையாட்டினால் ஏற்படுகின்ற வன்முறை சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வாறான நிகழ்வுகள் வீடியோ கேம் விளையாடுதல் என்பது பொழுதுபோக்கான விடயம் அல்ல என்பதை உணர்த்தி நிற்கிறது.

இலங்கையில் குறித்த ஆதார வைத்தியசாலையில் உள்ள மனநலப் பிரிவுக்கு கொண்டு வரப்படும் ஒவ்வொரு 10 குழந்தைகளில் ஒரு குழந்தை விளையாட்டு அல்லது இணையத்திற்கு அடிமையாவதன் காரணமாக ஏதாவது மன உளைச்சலுக்கு ஆளாவதாகக் கண்டறியப்பட்டுள்ளது என மனநல மருத்துவர் குறிப்படுகின்றார்.

வீடியோ கேம் விளையாட்டிற்கு அடிமையானவர்கள், அவை மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும், மகிழ்ச்சியைத் தருவதற்கும் பெரிதும் உதவுவதாகவும், வீட்டில் தனிமையைப் போக்க, பள்ளிப்பருவத்தில் கணினி விளையாட்டுகளை விளையாடத் தொடங்கியதாகவும் விரைவிலேயே அதற்கு அடிமையாகி, தன் வேலையைப் புறக்கணித்ததாகவும், விளையாட்டை மிகவும் ரசித்ததால், ஓய்வு நேரத்தின் ஒவ்வொரு நிமிடத்தையும் கேமிங்கில் செலவிடத் தொடங்கியதாகவும் ஆய்வுகளில் குறிப்பிடுகின்றனர்.

'குணப்படுத்துவதை விட தடுப்பதே சிறந்தது' என, இந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பதை விட, இதுபோன்ற நோய்களை தவிர்க்க நடவடிக்கை எடுப்பதே புத்திசாலித்தனம் என, டாக்டர் குமாரநாயக்க கூறினார்.

விளையாட்டு நடவடிக்கைகள் அல்லது பெற்றோர்கள் குழந்தைகள் ஸ்மார்ட் தொலைபேசிகளில் அதிக நேரத்தை செலவிடுவதற்கு அனுமதிப்பதும், குழந்தைகள் எந்த வகையான வீடியோக்கள் மற்றும் வீடியோ கேம்களை விளையாடுகிறார்கள் என்பது தொடர்பில் அக்கறையின்றி இருப்பதனால் ஆபாசம் மற்றும் வன்முறை நிறைந்த வீடியோக்களில் இடம்பெறும் காட்சிகள் குழந்தைகள் மனதில் ஆழமாக பதிவதுடன், அந்த வன்முறைகளை தாம் வாழும் சூழலில் தம்மை சார்ந்தவர்களிடத்திலும் பிரயோகிக்கின்ற தன்மை காணப்படுகின்றது.

குழந்தைகள் YouTube தளத்தில் தமக்கான வீடியோக்களை பார்வையிடுகின்றனர். YouTube தளத்தில் குழந்தைகளுக்கான வீடியோக்களுக்கு 13 வயதுக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. தொடர்ந்து 12 வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்காகவே 'யூ டியூப் கிட்ஸ்' என்ற தனி செயலியை அந்த நிறுவனம் அறிமுகப்படுத்தியதுடன், நடைமுறையில் அந்த செயலிலும் எதிர்பார்த்த அளவுக்கு குழந்தைகளின் வயதுக்கு ஏற்ற வீடியோக்களைப் பிரித்து பார்வையிடுவதற்கு வழங்கவில்லை.

இதனால் தற்போது https://youtube.com/kids/ என்ற தனி இணையதளத்தை YouTube நிறுவனம் அறிமுகம் செய்துள்ளதுடன், இதில், 4 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான வீடியோக்கள், 5 முதல் 7 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான வீடியோக்கள், 7 வயதுக்கு மேற்பட்டவர்களுக் கான வீடியோக்கள் என தனித்தனியாக பிரிவுகள் உள்ளன. இந்த வீடியோக்களில் ஆபாசம், வன்முறை போன்ற விடயங்கள் இடம் பெறாது என்றும் மேலும் பாதுகாப்பான வகையில் இந்த இணையதளத்தைக் குழந்தைகள் பயன்படுத்த முடியும் எனவும் அந்நிறுவனம் உறுதி அளித்துள்ளது.

வீடியோ கேம் விளையாட்டுகளில் இருந்து குழந்தைகளை மீட்க நினைப்பவர்கள் படிப்படியாக அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். இந்த விளையாட்டுகளில் இருந்து வெளிவர நினைப்பவர்கள் இவற்றைப் படிப்படியாக கைவிடுவது நல்லது. திடீரென இதனை நிறுத்தினால், மனநல பாதிப்பிற்கு நிகரான அளவு பாதிப்பினை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## இந்தியா சாதனை: ஊர்வசிக்கு வேதனை



நடிகை ஊர்வசி ரவுத்தேலா இந்தி, பெங்காலி, கன்னட மொழி படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார். தமிழில் 'தி லெஜண்ட்' படத்தில் கதாநாயகியாக நடித்து ஊர்வசி ரவுத்தேலா பிரபலமடைந்தார். இந்நிலையில், அகமதாபாத், நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போட்டி நடைபெற்றது. இந்த போட்டியை காண திரைப் பிரபலங்கள் பலர் சென்றனர். இதில் நடிகை ரவுத்தேலாவும் பார்வையாளராக சென்றிருந்தார். அப்போது அவர் தனது 24 கரட் கோல்டு ஐ போனை தவறவிட்டுள்ளார். இது தொடர்பில் ஊர்வசி, அகமதாபாத் பொலிஸ் நிலையத்தில் புகாரளித்துள்ளார்.



## 10 நிமிடங்கள் முக்கியம்

விஜய், த்ரிஷா, சஞ்சய் தத், அர்ஜுன், மிஷ்கின், கௌதம் மேனன் உள்ளிட்ட பலரது நடிப்பில் உருவாகியுள்ள லியோ திரைப்படம் எதிர்வரும் 19ஆம் திகதி உலகம் எங்கும் வெளியாக உள்ளது.

தற்போது லியோ படத்துக்கான டிக்கெட் முன்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் தற்போது அப்படத்தின் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் ரசிகர்களுக்கு ஒரு செய்தி வெளியிட்டுள்ளார்.

## வேதிகாவின் வேதனை



'மதராசி' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகி தொடர்ந்து பல தமிழ், தெலுங்கு படங்களில் வேதிகா நடித்து வருகிறார். மீண்டும் சினிமா மற்றும் வெப் தொடர்களில் நடித்துவரும் வேதிகா பேட்டியொன்றில் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அவர் கூறுகையில், "தமிழ் சினிமாவில் கதாநாயகிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏராளமான படங்கள் வருவது மகிழ்ச்சியாக உள்ளது. சிறு பட்ஜெட், பெரிய பட்ஜெட் படங்கள் என்பது முக்கியமல்ல. கதைதான் பட்ஜெட்டை முடிவு செய்கிறது.

பேட்ட ராப் படத்தில் பிரபுதேவாவுடன் மகிழ்ச்சியாக நடித்து வருகிறேன். முனி 3 என்ற பேய் படத்தில் நடித்தேன். பேய் இருக்கிறதா இல்லையா என்று எனக்கு தெரியாது. பேய் படம் பிடிக்கும் ஆனால் பேயைக் கண்டு ரொம்ப பயப்படுவேன்.

நான் விலங்குகளுக்காக குரல் கொடுத்து வருகிறேன். அதனால் அசைவம் சாப்பிடுவதில்லை. பால் கூட குடிப்பதில்லை. காரணம் என்னவென்றால் கன்று குட்டி குடிக்க வேண்டிய பாலை திருடி நாம் குடிப்பது போல் உள்ளது. எனவே பால் குடிப்பதில்லை. தோல் செருப்பு கூட அணிய மாட்டேன்" என்று கூறியுள்ளார்.



## திருமண புகைப்படம்! சமந்தாவின் பாராட்டு

தமிழ், தெலுங்கு படங்கள் மட்டுமின்றி இந்தி வெப் சீரியல்களிலும் நடித்துள்ள சமந்தா, விஜயதேவர கொண்டாவுடன் நடித்த குஷி படத்துக்கு பிறகு இன்னும் எந்த புதிய படத்தில் நடிக்கவில்லை.

குஷி படத்துக்கு பிறகு நடிப்புக்கு ஒரு சிறிய பிரேக் கொடுத்து விட்டு வெளிநாடுகளுக்கு சுற்றுலா சென்று இருந்த சமந்தா, தற்போது மயோசிட்டீஸ் நோய்க்கான சிகிச்சையில் ஈடுபட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த நிலையில், தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட சமந்தாவிடத்தில் ரசிகர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

உங்களைத் திருமணம் செய்தது போல ஒருவர், புகைப்படத்தை மார்பிங் செய்து வெளியிட்டு உள்ளாரே. அது குறித்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்டார். அதன்போது, குறித்த நபர் காட்டிய புகைப்படத்தை வாங்கி பார்த்த சமந்தா, நிறைய நேரம் செலவழித்து என்னுடைய புகைப்படத்துடன், அவரது புகைப்படத்தையும் இணைத்து இந்த டிசைன் செய்துள்ளார். அந்த ரசிகரின் முயற்சியை நான் பாராட்டுகிறேன் என்று கூறியிருக்கிறார்.

தமிழக மீனவர்கள் 27 பேர் கைது

# விடுவிக்குமாறு வலியுறுத்தவும்

## ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்

இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 27 மீனவர்கள் மற்றும் அவர்களது ஐந்து மீன்பிடிப் படகுகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு, கடிதமொன்றை திங்கட்கிழமை (16) அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில், இந்திய மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில், இருவேறு சம்பவங்களில் 27 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக முதல்மைச்சர் தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

தாம் ஏற்கனவே மத்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு எழுதியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததுபோல, தொடர்ச்சியாக இதுபோன்று மீனவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்படும் சம்பவங்கள் மீனவ மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ள மீனவர்கள் கைது செய்யப்படுவதால், மீனவ மக்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இதுபோன்ற சம்பவங்களால் மீனவ சமுதாயக் குடும்பத்தினருக்குப் பொருளாதார இழப்புகள் ஏற்படுவதோடு, இத்தொழிலை நம்பியுள்ள எண்ணற்ற குடும்பத்தினரின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.







உலகக் கிண்ணம்:

# இங்கிலாந்தை வீழ்த்திய ஆப்கானிஸ்தான்

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், டெல்லியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான இங்கிலாந்து உடனான போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

ஆப்கானிஸ்தான்: 284/10 (49.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 80 (57), இக்ரம் அலிகில் 58 (66), முஜீப் உர் ரஹ்மான் 28 (16), இப்ராஹிம் ஸட்ரான் 28 (48) ஓட்டங்கள். பந்துவீச்சு: அடில் ரஷீட் 3/42, மார்க் வூட் 2/50, ஜோ றூட் 1/19, லியாம் லிவிங்ஸ்டோன் 1/33, றீஸ் டொப்லி 1/52) இங்கிலாந்து: 215/10 (40.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹரி ப்ரூக் 66 (61), டேவிட் மலன் 32 (39), அடில் ரஷீட் 20 (13), மார்க் வூட் 18 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரஷீட் கான் 3/37, முஜீப் உர் ரஹ்மான் 3/51, மொஹமட் நபி 2/16, பஸல்ஹக் பரூக்கி 1/50, நவீன்-உல்-ஹக் 1/50)

போட்டியின் நாயகன்: முஜீப் உர் ரஹ்மான்

இந்நிலையில், தரம்சாலாவில் இன்று (17) பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நெதர்லாந்தை தென்னாபிரிக்கா எதிர்கொள்ளவுள்ளது.



குஜராத்

## 5,300 ஆண்டுகள் பழைமையான கல்லறைகள்

இந்தியாவின் மேற்கு மாநிலமான குஜராத்தில், குறைந்த மக்கள் தொகை கொண்ட கட்ச் பகுதியில் உள்ள கிராமம் கதீயா. அங்கு ஒரு மணல் குன்றினை தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் அகழாய்வு செய்துள்ளனர்.

அப்போது மணல் குன்றின் உள்ளே பழங்கால குடியிருப்பு புதைந்து கிடப்பது போன்ற அடையாளங்கள் காணப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து கேரள பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்லியல் அறிஞர் ராஜேஷ் தலைமையில் இந்திய, சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் இந்த 40 ஏக்கர் பரப்பளவிலான தளத்தில் 3 கட்டமாக அகழாய்வு செய்துள்ளனர். அப்போது அது 5,300 ஆண்டுகள் பழமையான கல்லறைகள் என தெரியவந்துள்ளது.



மிசோரம்

## “மணிப்பூரை விட இஸ்ரேல் மீது தான் ஆவல் அதிகம்”

இந்தியாவின் 5 மாநில சட்டசபை தேர்தல்களில் மிசோரமும் ஒன்றாகும். 40 தொகுதிகளை கொண்ட அம்மாநிலத்துக்கு நவம்பர் 7ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி திங்கட்கிழமை (16) மிசோரமில் பாத யாத்திரை மேற்கொண்டுள்ளார். ஜஸ்வால் சென்ற அவருக்கு ஏராளமான காங்கிரஸ் தொண்டர்கள் வரவேற்றனர். அங்குள்ள சன்மாரி சந்திப்பில் இருந்து அவர் பாத யாத்திரையை தொடங்கியுள்ளார்.

பேரணிக்கு பிறகு ஆளுநர் மாளிகை அருகே நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி பேசியுள்ளார்.

அப்போது மணிப்பூர் தற்போது ஒரு மாநிலமாக இல்லை. இரண்டு மாநிங்களாக பிரிந்து நிற்கின்றன. இவ்வளவு நடந்தும், மணிப்பூர் செல்ல வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு தோன்றவே இல்லை. மணிப்பூரில் என்ன நடக்கிறது என அறிவதை விட, இஸ்ரேலின் என்ன நடக்கிறது என அறிவதில்தான் பிரதமர் மோடி ஆவலாக உள்ளார். என குறிப்பிட்டுள்ளார்.

## உலக அழகி போட்டியில் திருநங்கைகள்




ஆண்கள்- பெண்களுக்கு சவால் விடும் வகையில் திருநங்கைகளும் ஒவ்வொரு துறையிலும் சாதித்து வருகின்றனர். இந்நிலையில், அழகி போட்டி வரலாற்றில் முதன்முறையாக 2 திருநங்கைகள் பங்கேற்கவுள்ளனர்.

72ஆவது உலக அழகி போட்டி இந்த ஆண்டு நவம்பர் மாதம் மத்திய அமெரிக்க நாடான எல் சால்வடாரில் நடைபெற உள்ளது. இந்த போட்டியில் உலகம் முழுவதிலும் இருந்து பல்வேறு நாடுகளை சேர்ந்த 90 அழகிகள் கலந்து கொள்ள உள்ளனர். இவர்களுக்கு போட்டியாக 2 திருநங்கைகளும் களம் இறங்கி உள்ளனர். அதில் ஒருவரது பெயர் மெரினா மஷேடி (23) இவர் விமான பணிப்பெண்ணாக பணியாற்றி வருகிறார். கடந்த வாரம் நடந்த மிஸ் போர்ச்சுக்கல் அழகி போட்டியில் இவர் வெற்றி பெற்று பட்டம் வென்றுள்ளார்.

மற்றொரு திருநங்கை பெயர் ரிக்கி கோலே. நெதர்லாந்தைச் சேர்ந்த மொடல் அழகியாவார். அவர் ஜூலை மாதம் நடந்த அழகி போட்டியில் மிஸ் நெதர்லாந்து அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் மூலம் மிஸ் நெதர்லாந்து பட்டம் வென்ற முதல் திருநங்கை என்ற பெருமையை பெற்றவராவார்.



## “நிபந்தனையின்றி பிணைக்கைதிகளை விடுவிக்க வேண்டும்”

இஸ்ரேல்- ஹமாஸ் போர் குறுத்து ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர்அன்டோனியோ குட்டரெஸ் தனது எக்ஸ் தளத்தில், “மத்திய கிழக்கில் நாம் படுகுழியின் விளிம்பில் இருப்பதால், எனக்கு இரண்டு மனிதாபிமான வேண்டுகோள்கள் உள்ளன.

எவ்வித நிபந்தனைகளும் இன்றி ஹமாஸ் அமைப்பினர் பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும், காசாவில் உள்ள பொதுமக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகள் விரைவில் கிடைக்க இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும்” என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## 26 வழக்குகளில் வாதாடி வென்ற சட்டத்தரணி கைது



உயர்நீதிமன்றத்தின் 26 வழக்குகளில் வெற்றி பெற்ற போலி சட்டத்தரணியை கென்யா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கென்யா பகுதியை சேர்ந்தவர் பிரையன் முவெண்டா. இவர் அங்குள்ள உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பணியாற்றி வந்துள்ளார். பிரையன் திறம்பட செயல்பட்டதால் அவர் பங்கேற்ற 30 வழக்குகளில் 26 வழக்குகளை திறம்படி வாதாடி வெற்றிப் பெற்றுள்ளார்.

இந்த நிலையில், சில சட்டத்தரணிகள் பிரையனின் சான்றிதழ் குறித்து கேள்வி எழுப்பிய நிலையில், அதனை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அந்த ஆய்வில் சான்றிதழ்கள் அனைத்தும் போலியானவை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து அவரை கென்யா பொஸார் கைது செய்துள்ளனர். அவர் வாதாடி வெற்றிப் பெற்ற வழக்குகளை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென கென்யா உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## தேசியத்தில் சாதித்த சிவானந்தா மாணவருக்கு கௌரவம்

எம்.எஸ்.எஸ். நூர்தீன்

தேசிய மட்டத்தில் மல்யுத்த போட்டியில் சாதனை படைத்த சிவானந்தா தேசிய பாடசாலை மாணவர்களுக்கு கௌரவம் வழங்கும் நிகழ்வானது, பாடசாலையின் அதிபர் எஸ். தயாபரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பாண்ட் வாத்திய இசை முழங்க அழைத்து வரப்பட்ட சாதனை மாணவர்களுக்கு மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து தேசிய மட்டத்தில் மல்யுத்த போட்டியில் தங்க பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட மாணவனையும், வெள்ளிப் பதக்கங்கள் இரண்டையும், வெண்கலப் பதக்கங்கள் இரண்டையும், தைக்குவாண்டோ போட்டியின் மூலம் வெண்கலப் பதக்கமொன்றைப் பெற்று மாவட்டத்துக்கு பெருமை சேர்த்த மாணவர் இதன்போது கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

டயலொக் மத்திய ஆசிய சவால் கிண்ணத் தொடர்:

## உஸ்பெக்கிஸ்தானை வீழ்த்தி சம்பியனான இலங்கை

CAVA Men's Volleyball Challenge Cup Colombo 2023
Powered by Dialog






டயலொக் மத்திய ஆசிய சவால் கிண்ணத் தொடரில் இலங்கை சம்பியனானது.

கொழும்பில் நடைபெற்று வந்த இத்தொடரில், சுகததாஸ உள்ளரங்கில் ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்ற உஸ்பெக்கிஸ்தானுடனான இறுதிப் போட்டியில் 25-14, 25-18, 25-22 என்ற நேர் செட்களில் வென்றே இலங்கை சம்பியனாகியிருந்தது.

இத்தொடரின் மிகவும் பெறுமதி வாய்ந்த வீரராக மகேல இன்டீவர பண்டார தெரிவாகியிருந்தார்.






வாலிபர் கிண்ணத் தொடர்:

## சம்பியனானது ஆனைக்கோட்டை யூனியன்

அஸ்ஹர் இப்றாஹிம்

இளவாலை வருத்தபடாத வாலிப சங்கம் தனது 10ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்திய வாலிபர் கிண்ண மாபெரும் கால்பந்தாட்டத் தொடரில் ஆனைக்கோட்டை யூனியன் சம்பியனானது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் அண்மையில் இடம்பெற்ற அணிக்கு 9 பேர் உள்ளடக்கிய இத்தொடரின் இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸை வென்றே யூனியன் சம்பியனானது.

போட்டி 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்த நிலையில், வெற்றியைத் தீர்மானிப்பதற்கான பெனால்டியில் 5-4 என்ற ரீதியில் வென்று, யூனியன் சம்பியனானது.

இறுதிப் போட்டியின் நாயகனாக சென். மேரிஸின் சிந்துஜன் தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 17 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.